REG. No M. 2997.

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர்.
ச. கந்தையபிள்ளை

LeRédacteur
S. CANDIAH PILLAI

# VITTAGAM

# வித்தகம்

ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை.

VOL. III. புதுவை, தாது ௵ ஆனி ௴ ௧௨ ௳ (25—6—36) No. 28

## சுந்தரர் தேவாரம்.

கோல மால்வரை மத்தென நாட்டிக் கோளரவு சுற்றிக் கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய அமரர் கட்கருள் புரிவதுகருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு கண்டத் தேவைத்த பித்த நீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன் செழும்பொ ழிற் றிருப் புன்கூ ருளானே.

இயக்கர் கின்னரர் யமனொடு வருண ரியங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம் வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை யர்ச்சித் தார்பெறுமாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்
[கூருளானே.

## காசி ஹநுமான்காட்

## T S சீதாராம ஐயர் அவர்கள்

## எழுதுவது

(தொகுதி3, 24-ம் வாரத் தொடர்ச்சி)

கலியுக விருத்தியில் நூதன மகானுபாவர்கள், பிராசீன தபோநிஷ்டர்களின் நாமங்களையும் ஜடாதாராதி வேஷங்களையும் தரித்து ஜனங்களை பிரமிக்கச் செய்து தர்ம்மத்தை யுணரவொட்டாமல் குழப்பத்தில் விடுவார்களெனக் கருதியே திரி காலஞ் ஞானிகளாயும் தபோநிஷ்டர்களாயு முள்ள மஹரிஷிகளும்யதீசுவரர்களும்"தர்ம்ம சாஸ்திரம்" "சங்கர திக்விஜயம்" முதலான கிரந்தங்களை ஏற்கனவே எழுதி யிருக்கிறார்கள்.

அவ்விதம் பிராசீன மகான்களால் எழுதப்பட்ட தர்ம்ம சாஸ்திரம், உலகத்திற் கெல்லாம் பிராமாணிகமாய் விளங்கி வரும் "சங்கர திக்விஜயா" திக் கிரந்தங்களில் நம்பிக்கையற்றவர்களாகிய நூதன மாடாபிமானிகள், இங்கு வஸிக்கும் மஹாமஹோபாத்தியாயாதி பட்டங்கள் பெற்றுள்ள சாஸ்திர பண்டிதர்களின் ஜாப்தா ஒன்று ஸ்ரீமான் பண்டித ராஜா என்ற பட்டம் பெற்றவரிடம் தயார் செய்து கொண்டு ஷை பண்டித ராஜரையே தலைமையாக முன்னிட்டு பிரதியொரு பட்டதாரிகளான பண்டிதர்களிடங்களில் நேரிடச் சென்று இங்கு வரவிருக்கும் காமகோடி மடாதிபதிகளின் விஷயமாய் தாங்கள் செய்து வரும் பிரயத்தினங்களுக்கு அநுகூலமாக; அல்லது பிரதிகூல மின்றியாவது இருந்தால் ஷை மடத்து ஸ்ரீஸ்வாமிகள் இங்கு வந்தவுடன் விசேஷ வெகுமானங்களளிப்பதாக வாக்களித்து, பண்டிதர்களுக்கு வாய்ப் பூட்டு பூட்டி விட்டார்கள்.

மேற் சொன்ன வெகுமானாதிகளில் விருப்பமின்றி ஸத்தியத்திலும் தர்ம்மத்திலும் மாத்திரம் விருப்பங் கொண்ட நிஷ்பக்ஷபாதிகளாகிய வித்துவான்களும் யதீசுவரர்களும் "ஸ்ரீஜகத் குருசங்கரபகவத்பாதாள்" விஷயத்தில் தற்காலம் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை நன்கு விஜாரித்து உண்மையை, பொது ஜனங்களின் நன்மையின் பொருட்டு வெளியிடப் பிரயத்தினஞ் செய்தார்கள்.

"ஸ்ரீமத் ஜகத் குரு சங்கராசார்ய பக்தர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் ராமாபிலாஷ் பாண்டே என்பவர் இவ்விடத்திய "சூர்ய" ஹிந்தி பத்திரிகையில் ஸ்ரீமதாத்ய சங்கராசார்யாள் முகாந்திரம் ஸ்தாபிக்கப் பெற்ற மடங்கள் இப்போது நூதனமாய் ஸ்ரீஜகத் குரு சங்கராசார்யாளாக இவ்விடம் வரவிருக்கும் மடாதிபதிகளை ஸ்ரீமதாத்ய சங்கராசார்ய ஸ்வாமிகளின் பிரதய பீடாதிபதிகளாகவும் ஸ்ரீஜகத் குருவாகவும் வரவேற்பதற்கு தீவிர முயற்சிகள் செய்பவர்களைப்பற்றியும் சென்ற 1934 செப்டம்பர்22 உ ஒரு வியாஸ மெழுதியிருக்கிறார். ஷை வியாஸத்தை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து இதனடியில் எழுதியிருக்கிறது.

### 21-9-1934 "சூர்ய" பத்திரிகை வியாஸத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு

காசியானது ஹிந்து தர்ம்மத்திற்கு முக்கியமான கோட்டை. ஆகையால் இவ்விடத்திய தர்ம்ம ஸம்பந்தமான வியவஸ்தை பாரத வருஷத்தில் கௌரவத்தை யடைவது ஸ்வபாவமே. அனேகமாய் எல்லோரும் இவ்விடத்தில் கௌரவத்தை யடைந்து தன்னுடைய கௌரவத்தை விருத்தி செய்வதற் காசையுள்ளவர்களா யிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஸொந்த கௌரவத்தைக் காட்டிலும் காசியின் கௌரவமானது ரொம்பவும் பெரிது என்பதில் கொஞ்சமும் ஸந்தேகமில்லை.

சில பேர்கள் காஞ்சி காமகோடி மடத்தை ஜகத்குரு ஆத்யசங்கராசார்யாள் முகாந்தரமாக ஸ்தாபிக்கப் பட்ட முதல் பீடமென்று சொல்லியும் அந்த மடத்தின் அதிபதி ஸ்வாமிகளை ஜகத் குரு சங்கராசராயஸ்வாமிகளென்ற பதவியுடன் அலங்கரிக்க விரும்புகிறார்கள். இவ் விஷயத்திற்காக ஒரு வரவேற்புச் சங்கமும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதற்குகாசியிலுள்ள தர்ம்மப்பிரியர்களான அனேக ஸஜ்ஜனர்கள் ஸபையோர்களாகவும் காசிராஜா வரவேற்புக்குத் தலைமை வகிப்பவராயும் செய்யப் பட்டிருக்கிறார்கள். காசியிலுள்ள கண்ணியமும் தர்ம்மத்தில் பிரியமுமுள்ள சில பேர்களுடைய கையெழுத்துடனும் இப்போது இதற்கு எதிரிடையாக ஒரு அறிக்கை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு ஸர்வஸாதாரண ஜனங்களுக்கும் பரவச் செய்யப்பட்டிருக்கிறது. அதை உபேக்ஷை செய்வது விசாரசீலாளான புருஷர்களுக்கு அன்னிபாயமாகும். இது வரையில் ஆத்ய சங்கராசார்யாள் முகாந்தரமாய் ஸ்தாபிக்கப்பட்டது ஸ்ரீ சிருங்கேரி மடம், சாரதா மடம், கோவர்த்தன மடம், ஜ்யோதிர்மடம் என்றே தான் பிரஸித்தம். ஆனால் இப்பொழுது காஞ்சி காமகோடிமடமானது முதல் பீடமென்றும் அதினுடைய அதிபதியே ஜகத்குரு சங்கராசார்யாள் என்றும் நிலைப்பிக்கப் பிரயத்தினம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு மஹான், ஸன்னியாஸி என்ற ஹோதாவில் அந்த மடத்தின் அதிபதி ஸ்ரீஸ்வாமிகளை காசியில் வரவேர்ப்பதற்குப் பிரயத்தினமாயிருந்தால் அதில் யாருக்கும் எவ்விதமும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆனால் எவ்விதம் சில பேர்கள் முகாந்திரமாய் வரவேற்பிற்குப் பிரயத்தினம் நடந்து கொண்டிருக்கிறதோ அதில் பெரிய ரகஸ்யம் காணப்படுகிறது. இதினால் தர்மத்தையே முக்கியமாகக் கொண்ட ஸாதுக்களை பிரமத்திற்குள்படுத்தி இவர்கள் தன் கார்யத்தை நிறை வேற்றிக் கொள்ள விரும்புகிறார்கள். இப்பொழுது ஆத்ய சங்கராசார்யாள் முகாந்கரம் ஸ்தாபிக்கப்பட்ட நான்கு பீடங்களைக் காட்டிலும் காஞ்சி காம கோடி மடமே அதிக திரவ்யத்துடன் கூடினதாயும் அதினுடைய அதிபதி ஸ்ரீ ஸ்வாமிகளவாளே அதிக வித்துவானாயும், தபஸ்வியாயும், புருஷார்த்தியாயும் இருக்கலாம்: ஆனால் இதனால் அவருடைய மடமே ஆத்ய சங்கராசார்யாள் முகாந்தரம் ஸ்தாபிக்கப் பெற்ற மடங்களின் கணக்கில் வரமுடியாது. மேலும் அவருடைய வரவேற்பை ஜகத்குரு சங்கராசாரியாளென்ற பெயருடன் ஏற்க முடியாது.

(தொடரும்)

உள்நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 3.

வெளி நாட்டிற்கு
வருட சந்தாரூபா 4.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ—ÉGALITÉ—FRATERNITÉ

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
Tamil Pandit
Jaffna
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது.

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichéry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. III. | புதுவை, தாது ௵ ஆனி ௴ ௧௨ (25—6—36) | NO. 28.

## சுத்த சாதகம்.

ஏகமாயசையாத்தற்பரலிங்கமி
லீலையிற்சரமனேகமதாய்

மோகமாமிருளாயவ்விருளதனின்
மூடமாய்ச்சிற்றுநாளிருந்துஞ்

சோகமாமிந்தமருளதாயதனிற்
றுவக்குண்டுசிறிதுநாணடித்தும்

பாகமாமோவாயதிற்சின்னாணடித்தும்
பண்டுபோனின்றிடுமென்றே.

சலமதுதானேதிரண்டுப்பதாகிச்
சலம்வந்துட்புகவந்தச்சலமாய்

நிலமதின்விளங்குமஃதினைப்போல
நிமலமாமருவருடானே

குலவுலீலையினுற்றிரண்டுருவாகிக்
கூறின்றிக்கூறதாய்நடித்தும்

இலகன்மாத்திரமாய்நடித்துமுன்போலு
மிருந்திடும்பண்டையபடியே.

உ
திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.
[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை
தாது ௵ ஆனி ௴ ௧௨ ௳

## ஈயாமை.

உடலகத்து வித்தாய் வித்து என்னும் விந்து உருவமாய், கடையாயும் உள்ளாயும் விளங்கும் கடவுள் வடிவாய் (கடை + உள் = கடவுள்) உள் இயைந்து—உள் இருப்பதே இயலாகக் கொண்டு—உள் இயங்கும் தன்மை உடையதாய்— இயங்கி ஒலிக்கும் பெட்புடையதாய் விளங்கும் இயவுளை இயவுளாகிய ஆசானை,

முன்னிலை ஆசான் அருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் அமலமாக விளைவேற்றுதலால்,

அவ் விந்துவில் ஆக்கமுறும் அமல நாதங்காளால் சாதல் என்னும் நிறையை அழித்து அசுத்த தநுவாகிய கைத்த இல்லை அமல தநுவாகிய தக்க இல்லாக மாற்றுதலால்,

காலனுக்குத் தம்மை ஈயாது—சாதலடையாது-பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து நித்திபத்துவம் பெற்ற தத்துவப் பெரியாராகிய எமது இடைக்காடர் பெருமான் அருளிச்செய்த மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் அறக் கூறு என்னும் மூன்றாவது அத்தியாயத்தில் மூன்றாம் சூக்த மகுடமாகி மிளிர்வது "ஈயாமை" என்பது.

இதற்கு முந்திய சூக்த மகுடமாகிய "கண்ணறுத்தல்" என்பது "வித்தகம்" தொகுதி 3 இல.27இல் ஷெ சூக்தம் நுதலியவாறு ஒரு சிறிது விளக்கிக் கூறப்பட்டது.

நிஷ்காமிய ஆசை என்னும் தூய காமம் அடிப்படையாகப் பெற்ற—காமம் ஆட்சி பெற்ற தடமாகிய—காமாட்சி பீடமாகிய "தூக்கம்" என்னும் நிறை அமைந்த தடத்தை—தத்துவத்தை அடைந்து,

வேண்டிய முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்து உடம்பைத் தூரத்தலாகிய—துறத்தலாகிய—உடலுயிரை அமல மாக்குதலாகிய துறவறம் என்னும் ஆழியில் இழிந்த

மெய் யடியானது உடலுயிர் என்னும் யாக்கையானது—விமல பௌதிக தநுவானது எவ்வளவு எடுப்பினும் எடுத்த அளவு குறையாது என்ஞான்றும் நிறைந்து பூரணப் பட்டிருக்கும் மகத்தான நிலைமையை உடைய இடமாகும் எனவும்,

விந்து என்னும் வித்தானது தனது உற்பத்தித் தானமாகிய — பிருதிவி யம்சமாகிய தூலத்தில் உறைந்து வாய்மை யானதால் — நித்திபத்துவம் பெறுதலால் அத்தகைய யாக்கையாகிய உடலுயிரை "வாய்மையின் வித்து" எனவும்,

விந்துவின் இயக்கமாகிய நாதம் என்னும் ஒலியானது ஏற்றம் இறக்கம் என்னும் சீர் கொண்டு நடை அடைவுகளோடு இயங்கி அகம் நாடி விந்துவில் உறைந்து அவ் விந்துவோடு பிருதிவி அம்சமாகிய உடலில் உறைதலால்,

தன் சீர் பிணிக்கப் பட்டு அடங்கிச் சீர் பந்த பாஷாண ("நம்பகம்") இயல் பெற்று—நிழற் சாயை அற்ற கண்ணாடி அனைய பாஷாண இயல் பெற்று ஓ வடிவமாக மாற்றமடைதலால் அதனை (யாக்கை — உடலுயிர்) "நம்பகச் சேவிலி" எனவும்,

ஞேயமாக.— காட்சிப் பொருளாகக்—பிரத்தியட்சமாகக் காணப்படும் இப்பெற்றியினால்,

சாதல் என்னும் வாயிலை அறுக்கும் நீர்மை யுடையது அவ் உடலுயிர் ஆகிய யாக்கை எனவும்

"கண்ணறுத்தல்"

என்னும் மேலைச் சூக்தத்தால் கூறிய புலவர் பெருமான்

"ஈயாமை"

என்னும் இச் சூக்தத்தால், அத்தகைய யாக்கை (உடலுயிர்) அமலமாக மாற்ற மடையும் பெற்றியை விளக்கமுற உரைக்கின்றார் என அறிதற் பாற்று.

### மூவடி முப்பது.

———

அறக்கூறு 3.
ஈயாமை சூக்தம் 3.

தானே செய்வினை தான்றுய் கருவியாக்

கைத்தில் பொருந ருரையிட ரீர்த்துத் தக்கில் கொடைப்பயன் றடுத்தாட் கொளுமே.

என்பது சூக்தம்.

மாணவனது முயற்சியால் உடலகத்து விளைவேற்றப் பட்ட ஆசானாகிய — ஆசான் உரையாகிய நாதம் என்னும் அமல ஒலியானது அவ் உடலுயிரை அமலமாக மாற்றுதலின் பெற்றியை உணர்த்துதல் நுதலிற்று இச் சூக்தம் என்க.

ஈயாமை என்றால் இரப்போர்க்குக் கொடாமை எனவும், அப் பெற்றியானது "தன் வினை தன்னைச் சுடும்" என்றவாறு முற் பிறப்பில் தீய வினையை விளைத்தவனை அதற்கு ஏற்ற பயனை அநுபவிக்கச் செய்யும் கருவி எனவும்,

கால கதியால் பொருளற்றார் தம் பாட்டு இரப்போன்பால் இல்லை என்னும் மொழியை உரைத்தலாகிய துன்பத்தை நீக்குவது எனவும்,

அசற் பாத்திரத்தில் ஈவோன் அடையும் தீய பயனைத் தடுத்து அவனை நன்னெறிக் கண் உய்ப்பது எனவும்,

உலகியலுக்கு ஒப்பியவாறு எம் போலிய படிப்பாளிகள் பொருள் காணும் படியும், உண்மையை நாடும் ஆற்ற லுடையார் குருவருளால் அதனை உணர்ந்து உய்தி யடையும் படியும் அமைக்கப் பட்டது இச் சூக்தம் என அறிதற் பாற்று.

பண்டைத் தீவினையால் வறியராய் இரத்தற் றொழி லுடையார்க்குச் செல்வராயினோர் ஈயாமையை மேற் கொள்ளுதலால் அஃது அவ் இரவுடையார் தமது தீவினைப் பயனைத் தாமே துய்த்தற்குக் கருவியாகும் என்பதே.

"தானே செய்வினை தான் துய் கருவியா"

என்பதன் உலகியலுக்கு ஒப்பிய பொருளாகும்.

'கைத்து இல் பொருநர் உரை இடர் ஈர்த்து"

என்பதற்கு வறியராகிய பாடகர் செல்வர் பால் சென்று பரிசில் வேண்டிப் பாட்டிசைத்து நிற்றலாகிய துன்பத்தை நீக்குவது எனப் பொருள் கூறினும் ஆம்.

கைத்து — பொருள். கையகத்துள்ளது என்னும் பொருட்டு. பொருநர் — பாடகர் — கூத்தர் எனப் படுவோர். பொருநர் போர்க்களம் பாடுவோர் ஏர்க்களம் பாடுவோர் என இரு வகையினர் என்ப.

தக்கில் கொடை

தகுதி யற்றார் பால் கொடுக்கப் படுவது — அசற் பாத்திர தானம். அசற் பாத்திர தானத்தால் தீமை விளையும் என்றே நூல்கள் கூறு நிற்கும்.

இனி. இச் சூக்தத்தின் உண்மைப் பொருள் தான் யாதோ? எனின், சிறிது கூறுதும்:—

1

கைத்து இல் பொருநர் உரை

2

தானே செய்வினை இடர் ஈர்த்து

3

தான் துய் கருவியா தக்கில் கோடைப் பயன் தடுத்து ஆட்கோளுமே

அ

கைப்பு என்னும் களிம்புடைய இல்லாகிய மருளுடம்பில் மறையாய் — மறை பொருளாய் இருக்கும் சண்முகன் என்னும் பொருநன் முழக்கமாகிய நாதம் என்னும் ஒலியானது,

ஆ

மாணவன் உஞற்றும் சாதகங்களால் —சிவமுயற்சியால் ஆக்க முற்று அமலமாக விளக்கப்பட்டு அக் கைப்பு என்னும் களிம்பின் தன்மையால் ஆய சாதல் என்னும் துன்பத்தை — பிணி மூப்புச் சாக்காடுகளை நீக்கி,

இ

அம் மாணவன் பேரின்ப லாபம் பெறுதற் குரிய கருவியாக அக் கைத்த இல்லைத் தக்க இல்லாகிய அமல தநுவாக மாற்றிக் கொடுத்தலாகிய பயனால் அம் மாணவன் காலனுக்குத் தன்னை ஈயாதவாறு—ஈயாமையை மேற் கொண்டொழுகும்படி தடுத்து — சாதலைத் தடுத்து ஆட்கொள்ளும் என்பது.

பொருநர் உரை செய் வினை (யால்) இடர் ஈர்த்து கருவியா கொடைப் பயன் (ஆல்) தடுத்து ஆட்கொள்ளும் என இயையும்.

ஆசான் குறி வழியே வழுவாது நின்று, மாணவன் தான் உஞற்றும்புது வினையாகிய முயற்சியாற்றான்,

"அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்"

என்னும் பழமொழிக்கு ஒப்ப, அவனே —அம் மாணவனே தன் உடலகத்து மறை பொருளாய் இருக்கும் "பொருநர் உரை" என்னும் நாதமாகிய ஒலியை—அமல ஐகார ஒலியை ஆக்கமுறச் செய்து விளைவேற்ற வேண்டும் என்பதும்,

பஞ்சகாரம் எனப்படும் — பஞ்சாக்கரம் எனப் படும் எம் பெருமான் திருவடியாகிய அவ் அமல ஐகார ஒலியே அவனது உடலுயிரில் உள்ள கைத்தல் என்னும் களிம்பை — அழுக்கை இரியச் செய்து அக் களிம்பினால் ஆய துன்பம் களைந்து அம் மாணவன் பேரின்பம் துய்த்தற்குறிய கருவியாக அவன் உடலுயிரை அமலமாக்கி — கைத்த இல்லைத் தக்க இல்லாக்கி — எம் பெரு

மான் பூரணமாகக் குடி புகுந்த "புக்கில்" (தேவர்குறள்) ஆக்கி,

அவன் தன்னைக் காலனுக்கு ஈயாதவாறு சாதலைத் தடுத்து ஆட்கொள்ளும் என்பதும் இச் சூக்தத்தால் போந்த பொருளாகும்.

எம் பெருமான் திருவடி எனப்படும் அமல ஐகார ஒலியே உடலகத்து ஆக்கமுறுதலால் அவ் உடலுயிரை அமலமாக்கித் தம்மைக் காலனுக்கு ஈயாதவாறு தம்மை ஆட்கொண்டது என்க.

இவ் உண்மையையே பின் வரும் திருவாக்கால் எமது அப்பர் சுவாமிகளும் அருளிச் செய்வாராயினர்.

## அப்பர் தேவாரம்.

———

சாடவெடுத்தது தக்கன்றன்வேள்வியிற் [சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனுன்முக [னுந்
தேடவெடுத்தது தில்லையுட்சிற்றம்பலத்து [நட்டம்
ஆடவெடுத்திட்டபாதமன்றேநம்மை [ஆட்கொண்டதே.

(ஷை கோயில் திருவிருத்தம் பண்கொல்லி. [பாசு. 10)

"சிற்றம்பலத்துள் நட்டம் ஆட எடுத்திட்ட பாதம்" உடலில் உள்ள தகராகாசமாகிய இருதய புண்டரீகத்தில் நிறையோடு அசையும்--ஒலிக்கும் வேதமாகிய நாதம் அசைவு நடனம் ஒலி என்பன ஒன்றே ஆம்.

ஊனைக்கழித்து--ஊனமாகிய களிம்பை நீக்கி —காயமாயத்தைக் கழித்து உடலுயிரை அமல மாக்கி நித்தியத்துவம் அளிப்பன திருவடியே என்பது பின் வரும் திருவாக்காலும் நன்று வலியுறுதல் காண்க.

வானைக்கடந்தண்டத்தப்பான்மதிப்பன [மந்திரிப்பார்
ஊனைக்கழித்துய்யக்கொண்டருள்செய்வன [வுத்தமர்க்கு
ஞானச்சுடராய்நடுவேயுதிப்பனநங்கை [யஞ்ச
ஆனையுரித்தனகாண்கவையாறனடித் [தலமே.

(ஷை திருவையாறு திருவிருத்தம் பாசு.4)

ஞானச் சுடர்—அமல ஒளி. அமல ஒளி அமல ஒலி அமல நிறை சிவம் என்பன ஒன்றே. ஐயாறு -- பஞ்சநதம். இவையே பஞ்ச நாதம். அகிலத்துள்ள தலம் இடு குறி. மந்திரித்தல்—ஆசான் காட்டிய குறிவழியே உஞற்றும் சாதகம்; மகா மந்திராதிக்ப வித்தைப் பயின்று பருகல்.

"..............................................
மகர வித்தை ஆசான்முன் தூண்டிக் [காட்டில்
மணி முதலாய்த்தச நாதங் கேட்குந் [தானே"

எனச் சட்டை முனிவர் அருளியதும் அறிக.

பின் வரும் திருவாக்கும் நாதமே--ஒலியே எம் பெருமான் திருவடி என்பதைக் கற்பனைக் கூற்றுக்களால் நன்று வலியுறுத்துதல் காண்க.

பாடும்பறண்டையுமொந்தையுமார்ப்பப் [பரந்துபல்பேய்
கூடிமுழவங்குவிகவிழ்கொட்டக்குறுநரிகள்
நீடுங்குழல்செய்யவையமெளியநிணப்பிணக் [காட்(டு)
ஆடுந்திருவடிகாண்கஐயாறனடித்தலமே.

(ஷை திருவையாறு திருவிருத்தம் பாசு. 9)

'..............................................,
படுமுழவம்பாணிபயிற்றும்அடி
.............................................."

(ஷை திருவடித் திருத்தாண்டகம் பாசு.2)

"..............................................
பொருகழலும்பல்சிலம்பும்ஆர்க்கும்அடி
.............................................."

(ஷை ஷை பாசு. 5)

மேல் இவ் உண்மைப் பொருள் ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப்படும்.

## "கைத்தில் பொருநர் உரை"

கைத்த இல் என்பது கைத்தில் என்று ஆயிற்று. வெறுக்கத்தக்க களிம்புடைய இல் —சரீரம்; அசுத்த சரீரமாகிய உப்புப் பாண்டம்--மருளுடம்பு என்பது.

கைப்பு — வெறுப்பு — வெறுக்கத்தக்க களிம்பு — அழுக்கு — மலம். கைத்து இல் களிம்பினை உடையதாகிய இல் எனினும் ஆம். கைத்து — களிம்புடையது.

கைத்தில் பொருநர் உரை – மருளுடம்பில் மறையாய் — மறை பொருளாய் — இரகசியப் பொருளாய் இருப்பவனாகிய —உற்ற ஆக்கையின் உறு பொருளாகிய — உள் இருப்பதையே இயலாகக் கொண்டதாகிய — உள் இருந்து இயங்குவதையே —ஒலியாமல் ஒலிப்பதையே இயலாகக் கொண்டுள்ளதாகிய —இயவுள் ஆகிய ஆறு ஆதாரங்கள் என்னும் வாயில்களையுடைய சண்முகன் என்னும் பொருநன் முழங்கும் நாதப் பறை—ஒலி—சத்தம்–சொல் —உரை என்பது.

## திருமுருகாற்றுப்படை.

———

"..............................................
பெரியோ ரேத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகுபொருந்........................"

( ஷை அடி 274 — 276 )

என்பது காண்க.

இயவுள் என்பதே கடவுளும் ஆம். அதுவே உடலில் கடையாயும் உள் ஆயும் விளங்குவது. மையல் என்னும் அசுரனை -- தற்சுதந்திரம் என்னும் அசுரனை அறுத்தவன் --அழித்தவன் --மாற்றியன் --வாகனமாக்கியவன்-- மயிலாக்கியவன் -- வசப்படுத்தியவன் இவனே.

அசுரத்துவம் உடைய சத்தியை — அதிவேகத்தோடு இயங்கும் சத்தியை வெல்வது என்றால் எளிதாகுமா? இம் மாயா சத்தியை வெல்லாவிடின் சாதலை வெல்ல முடியாது.

ஆறு பொறிகளாலும் — ஆறு சத்திகளாலும் — ஆறு முகத்தாலும் ஆறு முகம் என்னும் சண்முகத்தாலும் முடியாது எனின், வேறு யாரால் முடியும்? வேறு எவராலும் முடியாது.

அந்தச் சண்முகமே சத்தி வேலைக் கைக் கொண்டால் வெல்ல முடியும். சத்தியால் சத்தியை வெல்ல வேண்டுமன்றி வேறு தடம் இல்லை. உண்டு என்பவன் மதியீனன்.

ஆறு அணி ஆறு அங்கம் ஆறுமுகம் சண்முகம் என்பன ஒன்றே.

ஆறு அணியை வகுத்து அவ் அணியின் திறத்தைக் கண்டு அவ் ஆறு அணியையும் தனக்கு உரிமையாக்கி— அடிமையாக்கி,

எத்தனையோ உருவங்களைச் சங்கற்பித்த மாத்திரத்தில் பெறும் வல்லபம் உடையவனும் தோன்றித் தோன்றி மறையும் சத்தி யுடையவனு மாகிய சூரனை அதம் செய்து,

அவனை வாகன மாக மாற்றியவன் — மயிலாக்கியவன் — வசப்படுத்தியவனே சண்முகன் என்னும் பொருநன் என்க.

பொருநன் = படைவீரன்.

ஆறு ஆதாரம் என்னும் ஆறு படைவீட்டிலும் வீற்றிருந்து போர் புரிபவன்; எஞ்ஞான்றும் போர் புரியும் செவ்வேலை உடையவன்.

பொருநன் பாடகன் எனினும் ஆம்.

நாத சொரூபியாய் உடலுள் நிறையோடு பாடிக் கொண்டு — ஒலித்துக் கொண்டு இருப்பவன் என்பது பொருளாகும்.

உரை என்பது சொல். அதுவே நாதம் — ஒலி.

## பரிபாடல்.

———

"கேள்வியுட் கிளந்த ஆசான் உரையும்"

என்புழி உரை என்பது நாதங்கள் என — நாதங்களாகிய வேதங்கள் எனப் பொருள் படுதல் காண்க. உரை என்னும் சொல்லே "கடவுள் உரு" என்பது சைமினியால் செய்யப் பட்ட வைதிக நூற்றுணிபு என்ப. சொல்லே இறைவன் வடிவம் என்பது சுருதி. இவ்வாற்றால் "பொருநர் உரை" என்பதன் உண்மைப் பொருள் கண்டு கொள்க.

"தானே செய்வினை இடர் ஈர்த்து"

மேலே கூறிய "பொருநர் உரை" என்னும் நாதம், முன்னிலை ஆசான் உரை வழி நிற்கும் மாணவன் தானே உஞற்றுகின்ற — அநுட்டிக்கின்ற சாதகங்களாகிய புது வினைகளால் — மதி முயற்சியால்,

கைத்த இல்லில் ஆக்க முற்று அக்கைத்த இல்லாகிய — களிம்புடைய இல்லாகிய சரீரத்துள்ள அசுத்த நிறையை — அசுத்தத்தை நீக்கி,

அசுத்தத்தால் ஆய துன்பங்களை— நரை திரை மூப்புப் பிணிகளை — சாக்காட்டை ஒழித்து அவ் உடலுயிரை விமலமாக்கி அமலமாக்கு கின்றது.

நாதம் என்னும் ஒலியால் மாற்றங்கள் உளவாதல் உலகியலிலும் உண்மை நிலையிலும் உண்டு.

புறப் பொருள்களில் ஓசையால் — ஒலியால் மாற்றங்கள் பல உளவாதல் போலவே, நமது உடலகத்தும் நாதங்கள் ஆக்க முறுதலால் மாற்றங்கள் பல உளவாதல் சத்தியம். இயற்கை முறை இதுவே என்க.

அசுத்த பௌதிக தநுவும் நாத முடையது. சுத்த பௌதிக தநுவும் நாத முடையது. இவை முறையே அசுத்த நாதங்களாகிய தூல நாதமும், சுத்த நாதங்களாகிய சூக்கும நாதமும் ஆம்.

சூக்கும நாதங்களே அமல ஐகார ஒலி எனப் படுவன. இவையே உடலுயிரை விமலமாக்கி அமலமாக்குவன; உடலுயிரில் உள்ள ஊனத்தை — இடரை ஈர்ப்பன — அறவே ஒழிப்பன; மாற்றிப் பிறத்தலாகிய துவிஜத்துவம் உடையச் செய்வன; சாதலைத் தவிர்த்து நித்தியத்துவம் அடையச் செய்வன என அறிதற் பாற்று.

அமல நாதங்களே "பருமிக்க நாதப் பறை" என மணிவாசகரால் போற்றப் பட்டன ஆகும். "வித்தகம்" தொகுதி 1 இல 10 இல் "நாதம்" என்னும் கட்டுரையில் இவ் வுண்மைகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. ஆங்கும் காண்க.

பேரின்ப சுகம் துய்த்தற் குரிய தூய உடம்பைப் பெறுவான் முயல வேண்டியவன் சீவனே — மாணுக்கனே ஆவன். அதற் குரிய முயற்சி — மதி முயற்சி — இடையறு உழப்பு மாணவனுக்கே உரியதாகும்.

அன்றி, ஆசானுய் முன்னிலையில் தோன்றிய குரு நாதனே மாணவனுக்கு யாதொரு கஷ்டமும் இல்லாமல் அவனைத் தூக்கிச் சிகரத்தில் வைத்து விடமாட்டான். முயற்சி யின்றி ஒன்றும் கைகூட மாட்டாது.

## குறள்.

———

தெய்வத்தால் ஆகாது எனினும்முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்.

எனவும்,

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(ஷ 62ம். அதி. ஆள் வினை யுடைமை.
(செ. 9, 10)

எனவும் வற்புறுத்தி யருளினர் எமது தெய்வப் புலவர்.

தெய்வம் என்னும் ஊழ் நமது நிவிர்த்தி நெறிக்கு மாறுபட்டதே ஆகும். ஆதலால் முயற்சியால் — இடையறு உழப்பினுல் அதனை உப்பக்கம் கண்டே — புறங் கண்டே — வென்றே உய்தி யடைய வேண்டும்.

விதியின் வசப்பட்டு — விதியின்படி மாண்டு போதல் உய்யும் நெறி ஆகாது — நிவிர்த்தி நெறி ஆகாது. விதி என்னும் மாயை வசப்பட்டு மாண்டு போதல் பிரவிருத்தி நெறியாகிய பிறவி நெறியே என்பது கண்கூடாகின்றது.

இன்ன நீர்மைத்தாய விதி வினையாகிய பழவினையை ஆசான் அருளால் பெறப்படும் மதி வினையாகிய புது வினையால் வெல்லுதல் வேண்டும்.

வினைக் கூட்டமாகிய — இருவினை சொரூபமாகிய முன்னிலைகளை தெய்வ சொரூபம் எனவும் அத் தெய்வம் என்னும் ஊழால் நமது உயரிய நோக்கங்கள் — எண்ணங்கள் பூர்த்தி யடைவது முடியாத காரியம் எனவும் நன்குணர்ந்து,

மதி முயற்சி என்னும் மதி வைராக்கியத்தைக் கடைப் பிடித்து, தனக்குரிய நிறை யளவால் நித்திய நிறையை அணு அணுவாகத் தழுவி ஒழுகி வருங்கால், நல் வினை என்னும் மதி வினை விளைந்து விதி வினையை அழித்து விடும்.

"முயற்சிதன்மெய்வருந்தக்கூலிதரும்.,

என்னும் அருமறையின் உண்மைப் பொருள் இதுவே ஆம். விதி மதியால் வெல்லப்படும் என்பதனை இக் குறட் பாக்கள் நன்று வலியுறுத்துகின்றன. தத்துவப் பெரியார் துணியும் வேத உண்மையும் இதுவே ஆம் என்பது மறுக்க முடியாததே!

கைத்த இல்லாகிய — களிம்பு என்னும் விஷ உருவமாகிய — மிருகத்துவம் உடைய சரீரத்தில் இயங்கி ஒலிக்கும் நாதன் (பொருநன்) — நாதம் என்னும் ஒலி அசுத்த பஞ்சீகரண முடையது ஆதலால்,

அந் நாதத்தை — நாதனை — குருநாதனை — ஆசானை அந்தஈன ஸ்திதியினின்றும் — இழி தகைமையினின்றும் — பாசம் எனும் கார மில்லா அழுக்கினின்றும் வெளியேற்ற வேண்டும்.

அஃதாவது நாதம் எனும் இயக்கம் இயக்கம் எனும் வாயு கார மில்லா அழுக்காகிய களிம்பில் உறைய உறைய — அவ் வாயு தனது ஒக்கத்திற்கு இன்றி யமையாத அக்கினியின் சையோகத்தோடு இயைந்து களிம்பாகிய பாசத்தில் உறைய உறைய — நிறை கொண்டு உறைய உறைய,

சவர் என்னும் அவ் அழுக்குக்குக் காரம் ஏறும். ஏற ஏற அது சவர்க் காரம் எனப் பெயர் பெறும்.

பெற்று, அழுக்கானவை யாவற்ரோடும் கூடிக் கூடி அவ் அழுக்குடன் பஞ்சீகரகணித்து அவ் அழுக்கை அகற்றி சவர்க் காரமாகிய தானும் அகன்று அஃதாவது இரண்டும் கெட்டு மூன்ருவதாகிய அமலம் துளிர் பெற்று — ஆக்க முற்று விளைவேறி ஏற்ற பெற்றி அடைந்து,

கைத்த இல்லை, மாணவனுகிய பக்குவ சீவன் பேரின்ப லாபம் பெறுதற்குரிய கருவியாகும் படி, தக்க இல்லாக அமல தநுவாக மாற்றும் என்பது.

இவ்வாறு கைத்த இல்லாகிய அசுத்த இல்லைத் தக்க இல் என்னும் அமல தநுவாக மாற்றுவது என்ருல்,

அது சிவ முயற்சியால்—மாணவன் முயற்சியால்—அம் மாணவன் தானே செய் வினையால்—ஆசான் உரை வழி நின்று மதி வைராக்கியத்தோடு உளுற்றப்படும் அதி தீவிர முயற்சியால் ஆக வேண்டியதே யன்றி,

வேறு உபாயங்களால் அஃதாவது ஆசானே உலகியலுக்கு ஒப்பிய வைத்தியர்களைப் (டாக்டர்) போல ரண சிகிச்சை (Operation) செய்து உறுப்புக்களை மாற்றி கைத்த இல்லைத் தக்க இல்லாக மாற்றி விடுவான் என்பதும்,

பரிசத்தால் நோக்கால் பாவனைபால் — "நிர்வாண தீக்ஷைபால்" மாணவன் கஷ்ட மடையாத வாறு க்ஷணப் பொழுதில் கர்மங்களை — பாசங்கள் பற்றுக்களை ஒழித்து முத்தி அளித்து விடுவான்—சோதியைத் தோற்றுவித்து அதனுள்ளே மறையச் செய்து விடுவான் என்பதும் பிறவுமாகிய இன்னோரன்ன கூற்றுக்கள் எல்லாம்,

படித்த மேதாவிகள் எனப் போற்றப் படினும், தந்தரமாக வயிறு வளர்ப்பதற்குரிய வித்தையில் வல்லுநராயும், மெய் வருந்திப் பணி புரியும் வகையில் மிக்க சோம்பேறிகளாய் வதிந்து தங்கள் சோம்பேறித் தனத்தைப் பிறர் அறியாதவாறு,

உண்மைக்கு உண்மை எனும் சத்தியத்துக்குச் சில தோஷங்களைப் படிப்பு வல்லபத்தால் கற்பித்து உலக மாக்களை அணுப்பி வஞ்சக நெறியால் உயிர் வாழும் எம்போலிய மாக்கள் தங்கள் வெள்ளறிவால் கண்டு கூறும் பித்தலாட்டக் கூற்றுக்களே எனவும்,

இவற்ருல் மேலே கூறிய அமலம் சித்திக்கப் பெறுதல்—மாற்றிப் பிறத்தல் முயற் கொம்பே எனவும்,

முத்தி நெறி யறியாது செத்துப் போதலே முத்தி என அமையும் உலக மாக்களுக்கு வற்புறுத்துவான் உளங் கொண்டவராய்,

"தானே செய்வினை இடர் சுர்த்து"

என அருளிச் செய்வா ராயினர் எமது இடைக்காடர் என அறிதற் பாற்று.

அஃதாவது, மாணவனே தனது இடையறா உழப்பினால்—முயற்சியால் ஆசானை விளைவேற்ற வேண்டும். அஃதாவது தன் அகத்தே விந்தாய் விந்துருவமாய்—விந்து நாத உருவாய் இருக்கும் ஆசானை சீவன் தனது முயற்சியாற்றான் விளைவேற்றி உய்ய வேண்டும் என அறுதியிட்டனர் புலவர் என்பது.

இவ்வாறு விளைவேற்றப் பட்ட விந்து நாத உருவாகிய — அமல ஒலி வடிவாகிய இவ் ஆசானை — அமல நாதமே — நாத வேதமே—பொருநர் உரையே கைத்த இல்லின் கண் உள்ள இடரை ஈர்த்து—நீக்கி,

“தான் தூய் கருவியாக”—மாணவன் (“தான்”) பேரின்ப சுகம் பெறுதற்குரிய கருவியாக, அக் கைத்த இல்லை தக்க இல்லாக மாற்றுவது — தக்க இல்லை அளிப்பது என்க.

சூக்கும கற்பமாகிய சுத்த நாதங்களை ஆசான் குறிப்பின் வழியே சென்று கண்டு உண்டு உண்டு வர— அநுட்டித்து வர அஞ்ஞானமாகிய இருள் அணு அணுவாக நீறும்.

கைத்த இல்லில் உள்ள களிம்பு என்னும் அழுக்கு நீங்கும். படியேற்றம் உளதாகும். படி அணி என்பன ஒன்றே. இவற்றையே சித்தர் பெருமக்கள் வரை என்றனர்.

ஆறு படிகள் என்னும் ஆறு வரைகளையும் தாண்டி அப்பால் செல்ல வேண்டும். ஏழாவது படிதான் சப்த ஸ்தானம் எனப்படும்.

ஒலியாகிய நாதம், தச நாதம், கிண்கிணி நாதம், வீர கண்டாமணிச் சிலம்பொலியாகிய நாதம், சங்க நாதம், பஞ்ச நாதம் (பஞ்சநதம் — ஐயாறு இடு குறித் தலம்)பறை நாதம் என்பன முதலிய நாதங்களை மாணவன் தன் உழப்பால் கேட்பானாயின் அவனுக்குச் சாதல் ஏது?

இத் தகைய சுத்த நாதங்களைக் கேட்போர் சரீரத்துள்ள ஊனம் ஒழியும். ஒழியவே அவ் உடலில் எம்பெருமான் குடி புகுவன். அமலம் சித்திக்கும்: கைத்த இல் தக்க இல்லாகிய அமல தநுவாகும். இவ் அமல தநுவே சாதல் நீங்கி நித்தியத்துவம் பெறுவது.

இத்தகைய அமல நாதங்களைக் கேட்கும் அடியார் உடலில் எம் பெருமான் குடி புகுந்து பூரணப் படும் — நிறையும்—நிறை கொள்ளும் உண்மையை உணர்ந்து கற்கன்றே பின் வரும் ஞானசம்பந்தர் பாசுரம் எழுந்ததென அறிதற் பாற்று.

## ஞானசம்பந்தர் தேவாரம்.

———

பறையின்னொலிசங்கின்னொலிபாங்காரவு [மார
அறையும்மொலியெங்கும்மவையறிவாரவர் [தம்மை
நிறையும்,புனல்சடைமேலுடையடிகள் [நின்றியூரில்
உறையும்மிறையல்லதெனதுள்ளமுண [ராதே.
(ஷை திருநின்றியூர்பண்நட்டபாடைபாசு.3)

[அவர் தம்மை நிறையும் அடிகள் புனல் சடை மேலுடை அடிகள் எனத் தனித் தனி இயையும்.]

இவ்வாறு மாணவன் “தானே செய்வினை”யால் ஆக்கமுறும் “பொருநர் உரை” ஆகிய நாதங்கள்—வேதங்கள் கைத்த இல்லில் உள்ள இடரை—அழுக்கை — பாசத்தை நீக்கி “தான் துய் கருவியா”க—அம் மாணவன் பேரின்ப சுகம் துய்க்கும் கருவியாக அக் கைத்த இல்லைத் தக்க இல்லாக மாற்றும் என அறிக.

“தான் துய் கருவியா தக்கில் கொடைப் பயன் தடுத்து ஆட்கொளுமே.

குரு நெறி வழுவாது கடைப்பிடித்த மாணவன் தனது முயற்சியாற்றான் — இடையறா உழப்பினாற்றான் தனது உடலகத்து நாதங்களை ஆக்கமுற்று ஒடுங்கச் செய்ய வேண்டும். அவ்வாறு ஒடுங்கச் செய்தபோது தான் அமலம் சித்திக்கும்.

அம் மாணவன் பேரின்ப சுகம் துய்க்கும் கருவியாக, கைத்த இல் தக்க இல்லாக மாற்ற மடையும்—சீவன் முத்தி நிலை பூரணப் படும் என்க.

“பொருநர் உரை” என்னும் நாதம் மாணவன் முயற்சியால் ஆக்க முற்று இடர் ஈர்த்து அம் மாணவன் பேரின்ப சுகம் துய்க்கும் கருவியாக தக்க இல்லை அவனுக்குக் கொடுத்தலாகிய பயனால் —அளித்தலாகிய பேற்றினால் தடுத்து —சாதலைத் தடுத்து—அம்மாணவன் சாதலுக்கு —காலனுக்குத் தன்னை ஈயாதவாறு தடுத்து அவனை ஆட்கொள்ளும் —அனைத்தையும் ஆட்கொள்ளும் என்க.

தக்க இல் — தக்கில் என்றாயிற்று. பேரின்ப லாபம் பெறத் தக்க—நித்தியத்துவம் பெறத் தக்க தகுதியான—மெய்யான மெய் என்னும் திரு நாமத்துக்கு இலக்காகிய இல் என்பது பொருளாகும்.

“பொருநர் உரை” தக்க இல்லைத் தந்த பயனால் தடுத்து ஆண்டது என்க. நாத வடிவினனாகிய—வேத வடிவினனாகிய எம் பெருமான் அன்பர்களைத் தடுத்து ஆட்கொள்ளுதல் என்பதன் பொருள் இதுவே ஆம்

## திருவாய்மொழி.

———

..............................................
மெய்க்கொண்டுவந்துபுகுந்துவேதப்பிரா [னார்கிடந்தார்
பைக்கொண்டபாம்பணையோடும் [பண்டன்றுபட்டினங்காப்பே.

என்னும் பாசுரத்தின் பொருளும் இதுவே ஆம்.

“பட்டினங்காப்பே” என்பது, உடலுயிர் சாதல் நீங்கி நித்தியத்துவம்

பெற்றமையை —வேதப்பிரானுர் சாதலைத்தடுத்து ஆட்கொண்டமையை உணர்த்தி நின்றது.

இவ்வாறு வரும் தத்துவப் பெரியார் பாசுரங்கள் மிகப் பல வாகும். ஆங்காங்குக் கண்டு தெளிக.

அமல நாதங்கள் யாவும் உடலகத்து ஆக்க முற்று ஒடுங்கிய போது தான் அமலம் சித்திக்கும்—தக்க இல்லாகிய அமல தநு உளதாகும்—சீவன் முத்தி நிலை பூரணப் படும் என்னும் அரிய பெரிய வேத உண்மையானது திருவாசகத் திருப் படையாட்சிப் பதிகத்தாலும் வெள்ளிடை மலைபோல விளங்க வைக்கப் பட்டது. விரிப்பின் மிகப் பெருகும்.

"பொருநர் உரை" அணைத்தையும் கொண்டது–ஆட்கொண்டது–தடுத்து ஆட்கொண்டது என்பதன் பொருள் என்னை? எனின்,

நாதம் விந்துவில் உறைந்து அவ்விரண்டும் அமல மடைந்து நாத மயமாய் பிருதிவி அம்சமாகிய உடலகத்து உறைதலால், அவ் உடலுயிர் என்னும் யாக்கையானது அமல மடைந்து நாத சரீரம் ஆயிற்று என்பதே ஆகும்.

அமலமான நாதம் உடலுயிரை நாத மயமாக்கியதே—நாத சரீர மாக்கியதே ஆட்கொண்ட தென்பது.

கொண்ட போது கொடாதோ?—ஈயாதோ? எனின்,

கொடுத்தும் கொடாததே! கொடுக்கும் —உலவாது கொடுக்கும். எனினும் கொடாததே-ஈயாமை மேற் கொண்டதே!

என்? கொடுத்த அளவு குறைந்த பாடில்லை ஆதலால் என அறிக.

இவ்வாற்ருல், "ஈயாமை" என மகுடமிட்டு இடைக்காடர் பெருமான் அருளிய சூக்தத்தின் இரகஸியப் பொருளாகிய உண்மைப் பொருள் கண்டு கொள்க.

அமல நாத சொரூபியான எம்பெருமானுல் தடுத்து ஆட்கொள்ளப் பட்ட இத்தகைய நாத சரீரமாகிய தக்க இல்லே "ஈனமில் காயம்" எனப்படும் எம் பெருமான் வடிவம். இவ் அமல வடிவமே அருளாய் வெளியாய் ஞானகாசமாகிய பரத்தில் உலகு கண்டிட ஒடுங்குவது.

"ஈனமற்றகர்ய்மாய்இருப்பன்எங்கள்
[ஈசனே"

என்றனர் சிவவாக்கியர்.

## திருமந்திரம்.

———

"ஈனமில்காயம்இருக்கும்இருநிலத்து
[ஊனங்கள்ஒழித்துஒன்றுவோர்கட்கே,,

என்றர் அண்ணல் திருமூலர்.

நாத சொரூபியாகிய எம்பெருமான் சிவனுகிய சீவன் பூரணமாகக் குடிபுகுந்த இல்லாகிய — புக்க இல்லாகிய இத்தகைய தக்க இல், கைத்த இல்லாகிய துச்சில் தோறும் ஒதுங்கியிருந்து பிரிந்து உழலும் சீவர்களுக்கு, அமைய வேண்டும் என்றே எமது பொய்யில் புலவரும் காருண்ணியமிகுதியால் பின் வரும் செய்யுளால் இரக்கம் என்னும் மெய்ப்பாடு தோன்றக் கூறியருளினுர்.

## குறள்.

———

புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பி
[னுள்
துச்சி லிருந்த வுயிர்க்கு.

( ஷை 34 ம் அதி. நிலையாமை செ. 1 )

இதன் பொருள் முன்னைக்கட்டுரைகளில் விளக்கமுற உரைக்கப்பட்டது —ஆங்காங்குக் கண்டு தெளிக.

மேலும் விளக்கமுற விரிப்பின் மிகப் பரக்கும் திறனமைந்த இச் சூக்தப் பொருள் அவகாசத்திற்கு ஏற்ப ஒரு வகையான முடிபு பெறுவ தாயிற்று.

இதுகாறும் கூறியவைகளால் மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் அறக்கூறு என்னும் மூன்ருவது அத்தியாயத்தில் மூன்ரும் சூக்த மகுடமகிய "ஈயாமை" என்பதன் பண்பும் பயனும் ஷை சூக்தம் நுதலிய வாற்ருன் ஒருவாறு உணரத் தரும்.

சுபம்.


## BOOKS BY SRI AUROBINDO

| | RS. | AS |
|---|---|---|
| The Superman ... | 0 | 6, |
| Evolution ... | 0 | 8 |
| Thought and Glimpses ... | 0 | 9 |
| A System of National Education ... | I | 0 |
| The ideal of the Karmayogin ... | 1 | 10 |
| Essays on the Gita | | |
| First Series ... | 5 | 0 |
| Second Series .... | 7 | 8 |
| Isha Upanishad .... | 1 | 8 |
| Ideal and Progress ... | 1 | 0 |
| War and Self - Determination .... | 2 | 0 |
| The Renaissance in India ... | 1 | 12 |
| The National Value of Art .... | 0 | 8 |
| Uttarapara Speech .... | 0 | 4 |
| Kalidasa .... | 1 | 0 |
| Yogic Sadhan .... | 1 | 0 |
| The Yoga and its object .... | 0 | 12 |
| The Mother .... | 1 | 0 |
| The Riddle of this World.... | 2 | 0 |
| The Teaching and the Asram of Sri Aurobindo.... | 0 | 10 |
| Songs to Myrtilla .... | 1 | 4 |
| Baji Prabhu .... | 0 | 10 |
| Sx Poems of Sri Aurobindo .... | 1 | 4 |
| Lights on Yoga .... | 1 | 4 |

NANDHI PUBLISHING HOUSE
PONDICHERRY.


Imprimerie "VITTAGAM" -- Pondichéry. Le Directeur-Gérant. R. Nagarattinam.

# திருவாசக உண்மை.

யாழ்ப்பாணம், தென்கோவை தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமாந் ச. கந்தையபிள்ளை

( வித்தகம் பேராசிரியர் )

அவர்களால் எழுதப்பட்டது.

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவி யருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய திருவாசகத்தின் உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 0—2—9 அணா தபால் முத்திரைப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்

புதுவை.

## TOWARDS TRANSCENDENCE.

Vedanta Kesari Madras, Writes:—

"The book speaks of undiscovered possibilities hidden in the deeper reaches of the mind which could be brought into the conscious plane by a process of Transcendance of the various lower planes by which man becomes the superman possessed of great psychic powers, and later emerges with a still higher order of consciousness, as a Divine Personality."

Price As. 12.

**Nandhi Publishing House**
PONDICHERRY.

இனும்! இனும்!

# சுத்த சாதகம்

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் அல்லது 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.

புதுவை.

# ஜல வைத்தியம்.

வேண்டுவோர் 6 அணா தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம். புதுவை.

## "வித்தகம்" முதல் வருட, இரண்டாவதுவருட சஞ்சிகைகள் புத்தகமாக கட்டப்பட்டன.

ஒவ்வொன்றும் விலை ரூபா **3-8-0**

தபால் செலவு பிரத்தியேகம்.

## விஷய அட்டவணை.

### முதல் வருட தலையங்கங்கள் (Editorials)


1 எமது கொள்கை.
2 சைவசமயம்
3 ததுவப்பெரியார் நூல்கள்
4 எழுதாமறை
5 குருநெறி
6 வேதாகமங்கள்
7 இருக்குவேதம்
8 தமிழ் நெடுங் கணக்குத் திருத்தத் தீர்மானம்
9 திருவருளுட்டம்
10 நாதம்
11 அமல ஐகாரம்
12 அறமுதல் நாற் பொருள்
13 இல்லறம்
14 அன்னம்
15 துப்புரவு
16 17மனைவி
18 பொருள்
19 அருந்தல் பொருந்தல்
20 அனந்தல்
உடம்பின் பயன்
21 இடம்பட வீடெடேல்
22 ஜீவகாருண்ணியம்
23 முயற்சி
24 விதேக முத்தி
சதகே முத்தி
25 நான் மறை
26 பிரம சரியம்
27 இந்து மதம்
28 அடியார் பெருமை
29 நிறை
30 அடியார் இயல்
31 அருணோதயம்
32 யோகம்
33 அன்பு
34 பணி செய்து கிடத்தல்
35 அருள்
36 சகச நிட்டை
37 பாசு பதம்
38 மாற்றிப் பிறத்தல்
39 கற்பனை
40 சமாதி
41 பண்டைக் காலப் பௌத்த சமணரும் தற்காலச் சைவரும்
42 அறஞ்செய விரும்பு
43 நிறை முறை இல்லாக் கற்பனை
44 சங்கச் சான்றோர் நூல்கள்
45 தூல சூக்கும சம்பந்தம்
46 பதி பசு பாச உண்மை
47 வீடு பெற நில்
48 சண்டேசுரப் பேறு
49 காயசித்தி
50 ஆரியரும் தமிழரும்
51 வித்தகம் பேசேல்


### தொடர்ச்சியான கட்டுரைகள்.


தலையாய அறம்.
உடம்பின் அருமை பெருமை
இருக்கு வேத உண்மை சிதையை வர்தித்தல்
ஆரியனும் தமிழும்.
ஈழநாடும் தமிழும்.
நத்தம்போல் கேடு" என்னும் குறளுரை.
உயிர் வருக்கம்
உடலுயிரிர் சம்பந்தம்.
பெண்பாற் புலவர்கள்.


### இரண்டாவது வருட தலையங்கங்கள் (Editorials)


1 எமது பத்திரிகை
2 கல்வி
3 சிவமும் விஷ்ணுவும்
4 கேள்வி முயல்
5 காமேசன்
6 சோம்பித்திரியேல்
7 இடம்பொருள் ஏவல்
8 கற்பெனப்படுவது சொற் திறம்பாமை
9 வேதாந்தம் சித்தாந்தம்
10 சுழினை
11 மலபரிபாகம்
12 இருவினை ஒப்பு
13 விட்ட குறை
14 இராப் பகலற்ற இடம்
15 அரவமாட்டேல்
16 ஆலயந் தொழுவது சாலவும் நன்று
17 விருந்திலோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்
18 ஒத்த இடத்து நித்திரை கொள்
19, 20 ஓதுவதொழியேல்
21 ஆறுவது சினம்
22 மறைக்காட்டுக் கதவு திறத் [தல்
23 உடையது விளம்பேல்
24 ஈவது விலக்கேல்
25 ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
26 ஐயமிட்டுண்
27 குற்றம் பார்க்கில் சுற்றமில்லை
28 சிவத்தைப் பேணில் தவத் திற்கழகு
29 நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
30 பொருடனைப்போற்றி வாழ்
31 சூது விரும்பேல்
32 அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
33 மாரியல்லது காரியமில்லை
34 பூமி திருத்தி யுண்
35 மைசயொத்திருந்தால் செய்வன செய்
36 ஒருவனைப்பற்றி ஓரகத்திரு
37 ஊக்கமது கைவிடேல்
38 இல்லறமல்லது நல்லறமன்று
39, 40 கேட்டிலுறுதி கூட்டுமுடைமை,
41 மெல்லினல்லாள்தோள் சேர்
42 கைப்பொருடன்னின் மெய்ப் பொருள் கல்வி
43 தெய்வமிகழேல்
44 மோனமென்பது ஞான வரம்பு
45 சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்
46 கீழ்மை யகற்று [யும்
47 தேடாதழிக்கிற்பாடா முடி
48 ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
49 நீரகம் பொருந்திய ஊரகத் திரு
50 நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்
51 மீதூண் விரும்பேல்
52 சனி நீராடு
53 காப்பது விரதம்
54 வானஞ் சுருங்கில் தானஞ் சுருங்கும்


### தொடர்ச்சியான கட்டுரைகள்.


ஸர் ஜகதீஸ்சந்திரவஸு அவர்கள் செய்த பிரசங்கம்
சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி
அயிக்கவாதம் பேசிப் பயிக்க வாதம் புரியும்அறிவிலிகளுக்கு [வாய்ப் பூட்டு
பொ. முத்தையா பிள்ளை, உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி
உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி மறுப்பு.
ஈழநாடும் தமிழும்
உடலுயிர் சம்பந்தம்
பெண்பாற் புலவர்கள்
ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடத்திற்குரிய உத்கிருஷ்டம் நான் கின் ஆராய்ச்சி
20-ம் நூற்றுண்டின் இணையற்ற விஞ்ஞானம்.


Imprimerie "VITTAGAM" -- Pondichéry. Le Directeur-Gérant. B. Nagarattinam.